**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 93 of 2024

Deposition of witness for { Prosecution PW3
Defence
Court

Name :வெங்கிடசாமி
Father Name : கந்தவேல்
Village :அயன்ரெட்டியபட்டி
Taluk :காரியாபட்டி
Caste :
Calling :
Religion :
Age :39

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of February 2026.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது காரியாபட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் காரியாபட்டி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்த போது குற்ற எண்.199/2022 வழக்கின் சொத்துக்களை பகுப்பாய்வு செய்வதற்காக அதன் மாதிரியை சென்னை தடய அறிவியல் துறை மயிலாப்பூரில் ஒப்படைத்துவிட்டு 05.01.2023 ம் தேதி நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) நான் பகுப்பாய்விற்கு மாதிரியை 03.01.2023 ம் தேதி கொண்டு சென்றேன் என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 93 of 2024

Deposition of witness for { Prosecution PW2
Defence
Court

Name :வனிதா
Father Name : ராஜேந்திரன்
Village :ஆவியூர்
Taluk :காரியாபட்டி
Caste :
Calling :
Religion :
Age :34

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of February 2026.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது அருப்புக்கோட்டை நகர காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 02.09.2022ம் தேதி காரியாபட்டி காவல்நிலையத்தில் பெண் காவலராக பணியில் இருந்த போது சார்பு ஆய்வாளர் ஆனந்த ஜோதி, முதல் நிலை காவலர் ரமேஷ் குமார், முதல்நிலை காவலர் சிவபாலன் ஆகியோர்கள் சகிதம் போதை பொருள் தடுப்பு சம்மந்தமாக ரோந்து சென்ற போது காரியாபட்டி இந்தியன் வங்கி அருகே உள்ள டீக்கடையில் சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி அங்கு சென்ற போது எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து விசாரித்த போது ஆஜர் எதிரி ஆண்டிச்சாமி 330 கிராம் எடையுள்ள கணேஷ் 701 புகையிலை பாக்கெட்டுகள் இருந்தது. அந்த புகையிலையை யாரிடம் வாங்கினீர் என்று விசாரித்த போது செவல்பட்டியை சேர்ந்த மீனாட்சி என்பவரிடம் விற்பனைக்காக வாங்கி வந்ததாக கூறினார்.

2) எதிரி ஆண்டிச்சாமியை அழைத்துக்கொண்டு செவல்பட்டி ஆரம்ப தொடக்கப்பள்ளி அருகே உள்ள பெட்டிக்கடை சென்று சோதனை செய்த போது அங்கு பெட்டிக்கடையில் இருந்த மீனாட்சி என்பவர் தானாக முன்வந்து எங்களிடம் கணேஷ் புகையிலை 5 பாக்கெட்டுகள் மற்றும் கூலிப் 7 பாக்கெட்டுகள் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி புகையிலை பாக்கெட்டுகள் எவ்வித அரசு அனுமதியும், உரிமமும் இல்லாமல் சட்ட விரோதமாக வைத்திருந்ததால் மேற்படி எதிரிகளை தக்க காரணம் கூறி கைது செய்தும், புகையிலை பாக்கெட்டுகளை அன்றைய தினம் 4.30 மணியளவில் அத்தாட்சி தயார் செய்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் பொதுமக்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால் அ.சா.1 மற்றும் முதல்நிலை காவலர் ரமேஷ்குமாரும் கையொப்பம் செய்தனர். எதிரிகளை கைது செய்து நிலையம் கொண்டு வந்து காரியாபட்டி காவல் நிலைய குற்ற எண்.199/2022 வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) நான் எனது இருசக்கர வாகனத்தில் ரோந்துக்கு சென்றேன். அ.சா.1 மற்றும் சார்பு ஆய்வாளர் ஒரு இருசக்கர வாகனத்திலும், ரமேஷ் குமார் அவரது இருசக்கர வாகனத்திலும் ரோந்துக்கு சென்றோம். 1ம் எதிரியை ஏற்கனவே நான் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிரியை நாங்கள் பார்த்த போது வெள்ளை சாக்குப்பையை கையில் வைத்திருந்தார். 2ம் எதிரியை பார்த்த போது அவரும் வெள்ளை சாக்குபை வைத்திருந்தார். மேற்படி வெள்ளை சாக்குபையை கைப்பற்றினோம். 1ம் எதிரியிடம் கணேஷ் புகையிலையை கைப்பற்றிய இடத்தில் வைத்து மாதிரி எதுவும் எடுக்கவில்லை. எதிரிகளிடம் கைப்பற்றிய கணேஷ் புகையிலை, கூலிப், இரண்டு சாக்குபையை ஆகியவற்றை நிலையம் கொண்டு வந்தோம். அத்தாட்சியை சார்பு ஆய்வாளர் கைப்பட எழுதினார்

என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை.

4) நாங்கள் ரோந்து சென்ற போது நிலைய பொறுப்பு அதிகாரியின் முத்திரை எடுத்து சென்றோம். பொதுமக்கள் யாரும் எதிரிகள் புகையிலை பொருட்கள் விற்பது சம்மந்தமாக புகார் கொடுக்கவில்லை என்றால் அது பற்றி சார்பு ஆய்வாளருக்கு தெரியும். புகையிலை பொருட்கள் உட்கொண்டு யாருக்கேனும் தீங்கு ஏற்பட்டதாக புகார் எதுவும் வரவில்லைஎன்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் சார்பு ஆய்வாளர் என்பதாலும், விசாரணை அதிகாரி எனது உயர் அதிகாரி என்பதாலும் அவர்கள் வேண்டுக்கோள் படி அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன தேதி, நேரத்தில், இடத்திற்கு ரோந்து பணி செல்லவில்லை என்றும், எதிரிகளிடம் இருந்து புகையிலை பொருட்கள் எதுவும்கைப்பற்றப்படவில்லை என்றும், புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரம், தேதி, இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றும், எதிரிகளை பின்னிட்டு காவல்நிலையம் வரவழைத்து ஆவணங்களை உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வேறு வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்களை வைத்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி கடை அருகே பார்வை மகசர் மற்றும் வரைபடம் எதுவும் தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. சம்பவ இடத்தின் அருகே ஆரம்ப தொடக்கப்பள்ளி இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 93 of 2024

Deposition of witness for { Prosecution PW1
Defence
Court

Name :சிவபாலன்
Father Name : பாண்டித்துரை
Village :கூடக்கோவில்
Taluk :கள்ளிக்குடி
Caste :
Calling :
Religion :
Age :41

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of February 2026.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது அரியலூர் மாவட்டம், குடிமைப்பொருள் வழங்கல் குற்றபுலனாய்வு துறையில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.09.2022ம் தேதி 14.30 மணிக்கு நான் காரியாபட்டி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்த போது சார்பு ஆய்வாளர் ஆனந்த ஜோதி, முதல் நிலை காவலர் ரமேஷ் குமார், பெண் காவலர் வனிதா ஆகியோர்கள் சகிதம் போதை பொருள் தடுப்பு சம்மந்தமாக ரோந்து சென்ற போது காரியாபட்டி இந்தியன் வங்கி அருகே உள்ள டீக்கடையில் சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி அங்கு சென்ற போது எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து விசாரித்த போது அவரிடம் வெள்ளை சாக்குபையில் 330 கிராம் எடையுள்ள கணேஷ் 701 புகையிலை பாக்கெட்டுகள் இருந்தது. அந்த புகையிலையை யாரிடம் வாங்கினீர் என்று விசாரித்த போது செவல்பட்டியை சேர்ந்த மீனாட்சி என்பவரிடம் விற்பனைக்காக வாங்கி வந்ததாக

கூறினார்.

**2)** எதிரி ஆண்டிச்சாமியை அழைத்துக்கொண்டு செவல்பட்டி ஆரம்ப தொடக்கப்பள்ளி அருகே உள்ளபெட்டிக்கடை சென்று சோதனை செய்த போது அங்கு பெட்டிக்கடையில் இருந்த மீனாட்சி என்பவர் தானாக முன்வந்து எங்களிடம் கணேஷ் புகையிலை 5 பாக்கெட்டுகள் மற்றும் கூலிப் 7 பாக்கெட்டுகள் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி புகையிலை பாக்கெட்டுகள் எவ்வித அரசு அனுமதியும், உரிமமும் இல்லாமல் சட்ட விரோதமாக வைத்திருந்ததால் மேற்படி எதிரிகளை தக்க காரணம் கூறி கைது செய்தும், புகையிலை பாக்கெட்டுகளை அன்றைய தினம் 4.30 மணியளவில் அத்தாட்சி தயார் செய்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் பொதுமக்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால் நானும், முதல்நிலை காவலர் ரமேஷ்குமாரும் கையொப்பம்செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.1** ஆகும். என்னிடம் காட்டப்படும் கணேஷ் புகையிலை 9 பாக்கெட்டுகள் **சா.பொ.1** ஆகும். கூலிப் 7 பாக்கெட்டுகள் **சா.பொ.2** ஆகும். எதிரிகளை கைது செய்து நிலையம் கொண்டு வந்து காரியாபட்டி காவல் நிலைய குற்ற எண்.199/2022 வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

**3)** சா.பொ.1 கணேஷ் புகையிலை பாக்கெட்டுகளில் 1ம் எதிரி ஆண்டிச்சாமியிடம் 4 பாக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டது. சா.பொ.1ஐ பார்த்தால் எந்த பாக்கெட்டுகள் 1ம் எதிரியிடம் கைப்பற்றப்பட்டது என சொல்லமுடியாது என்றால் துல்லியமாக கூற இயலாது. 1ம் எதிரியிடம் கணேஷ் புகையிலை பாக்கெட்டுகள் கைப்பற்றிய போது மாதிரி எடுக்கவில்லை என்றால் அப்போது எடுக்கவில்லை. 2ம் எதிரி மீனாட்சி கடையில் வைத்து யாரிடம் கைப்பற்றப்பட்ட

வழக்கு சொத்தில் மாதிரி எடுக்கப்பட்டது என்றால் 1ம் எதிரியிடம் கைப்பற்றப்பட்ட கணேஷ் புகையிலை பாக்கெட்டின் மாதிரியும், 2ம் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கூலிப் பாக்கெட்டில் இருந்து 1ம் பாக்கெட் மாதிரியும் எடுத்தோம். மேற்படி விபரத்தை சார்பு ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**4)** அன்றைய தினம் காவல்நிலையத்தில் இருந்து ரோந்திற்கு 3.00 மணியளவில் சென்றோம். காவல்நிலையத்தில் இருந்து இந்தியன் வங்கி சுமார் 500மீ தூரம் இருக்கும். அந்த இடத்தினை சுற்றி கடைகள் உள்ளது. ஆட்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். 1ம் எதிரியிடம் கணேஷ் புகையிலை கைப்பற்றிய இடத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றால் சரிதான். இந்தியன் வங்கியில் இருந்து 2ம் எதிரியின் கடைக்கும் இடையே சுமார் 500 மீ தூரம் இருக்கும். 1ம் எதிரியை சோதனை செய்தோமா என்றால் சோதனை செய்யவில்லை. 2ம் எதிரியின் கடையை சோதனை செய்தோமா என்றால் செய்யவில்லை, எதிரிகள் தானாக முன்வந்து புகையிலை பாக்கெட்டுகளை எடுத்து ஆஜர் செய்ததால் சோதனை செய்யவில்லை. எதிரிகளிடம் கைப்பற்றிய பொருட்களுக்கான பட்டியல் தயார் செய்தோமா என்றால் அது பற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும்.

**5)** சார்பு ஆய்வாளர் காரியாபட்டி பஜாரில் ரோந்து செய்து கொண்டிருந்த போது ரகசிய தகவல் கைப்பேசி மூலம் கிடைத்தது. அத்தாட்சி சார்பு ஆய்வாளர் தயார் செய்தார். கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்கள் பேக்கிங் செய்யப்பட்டது என்றால் சரிதான். படிவம்-91 காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. அத்தாட்சி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அத்தாட்சியை மடிக்கணினியில் தட்டச்சு செய்து அருகில் உள்ள கடையில் பிரிண்ட் எடுக்கப்பட்டது. சார்பு ஆய்வாளர் அத்தாட்சியை தட்டச்சு செய்தார். ஏ.எம்.ஜெராக்ஸ் கடையில் அத்தாட்சி பிரிண்ட்

எடுக்கப்பட்டது. நான் சொன்னது போல் அத்தாட்சி மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு ஜெராக்ஸ் கடையில் பிரிண்ட் எடுக்கவில்லை என்றும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

6) நாங்கள் ரோந்து சென்ற போது நிலைய பொறுப்பு அதிகாரியின் முத்திரை எடுத்து சென்றோம். பொதுமக்கள் யாரும் எதிரிகள் புகையிலை பொருட்கள் விற்பது சம்மந்தமாக புகார் கொடுக்கவில்லை என்றால் அது பற்றி சார்பு ஆய்வாளருக்கு தெரியும். புகையிலை பொருட்கள் உட்கொண்டு யாருக்கேனும் தீங்கு ஏற்பட்டதாக புகார் எதுவும் வரவில்லைஎன்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் சார்பு ஆய்வாளர் என்பதாலும், விசாரணை அதிகாரி எனது உயர் அதிகாரி என்பதாலும் அவர்கள் வேண்டுக்கோள் படி அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன தேதி, நேரத்தில், இடத்திற்கு ரோந்து பணி செல்லவில்லை என்றும், எதிரிகளிடம் இருந்து புகையிலை பொருட்கள் எதுவும்கைப்பற்றப்படவில்லை என்றும், புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரம், தேதி, இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றும், எதிரிகளை பின்னிட்டு காவல்நிலையம் வரவழைத்து ஆவணங்களை உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வேறு வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்களை வைத்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி கடை அருகே பார்வை மகசர் மற்றும் வரைபடம் எதுவும் தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. சம்பவ இடத்தின் அருகே ஆரம்ப தொடக்கப்பள்ளி இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.